1973 ஏப்ரல் 3] [பேரவைத் துணைத் தலைவர்]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட்டது. (ஆரவாரம்.)

**(உ) தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/73).**

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு *(சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/73) பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 1/1959) முதலாம் விவர அட்டவணையில் கட்டுமான இயந்திரம், சுரங்க யந்திரங்கள், நிலத்தைச் சமன்படுத்தும் யந்திரங்கள் மண்வாரி டிராக்குகள் ஆகியவை பற்றிக் குறிப்பான பதிவு எதுவும் தற்போது இல்லை. இதன் விளைவாக மேற்சொன்ன சட்டத்தின்கீழ் இந்த இனங்களுக்கு வரி விதிப்பது குறித்து வரி விதிக்கும் அதிகாரிகள், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதைக் கருதி மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் இந்த இனங்களைத் தனிப்பட்ட இனமாக வகைப்படுத்துவதன்மூலம் இம்மாநிலத்தில் இவ்வகை இயந்திரங்களின் விற்பனையின் மேல் முதல் விற்பனை முனையில் 9 சதவீதம் என்னும் ஒரே படித்தான வீதத்தில் வரி விதிக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. மேற்படி சட்டத்தின் 59 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன் மூலம் செயல்வடிவம் கொடுக்கப்பட்டது.

சட்டத்திலுள்ள தெளிவற்ற நிலையைத் தவிர்ப்பதற்காக மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் அந்தந்த இடங்களில் அதாவது 1-வது இனத்திலும் 9-வது இனத்திலும் விளக்கப் பகுதிகளில், தட்டச்சு இயந்திர நாடாக்கள், இசைத்தட்டுகள், இசைத்தட்டு ஊசிகள் ஆகியவை திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதலாம் வரம்பு நிபந்தனையின் கீழ், மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்டவரைவு ஒன்று சட்டமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடரில் கொண்டுவரப்படவேண்டியுள்ளது.

---

* 1973 மார்ச் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

இம்மாநிலத்தில் தற்பொழுது ரப்பர் 3½ சத வித பலமுனை வரி விதிப்பிற்கு உட்பட்டது. இம்மாநிலத்தில் ரப்பர் முதற்கண் வாங்கப்படும் முனையால் அதற்கு 5 சதவித ஒரு முனை வரி விதிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரித் (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 12/73 கொண்டு வரப்பட்டு பேரவையின் ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இந்தச் சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இந்த அளவில் முடிவுற்று, 5—4—1973, வியாழக்கிழமை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.51 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. *Statutory Rules and Orders*

95. Notification issued with G.O. Ms. No. 242, Housing, dated the 3rd October 1972, making the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [*Laid on the Table of the House under section* 72 (2) *of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act*, 1971 (*Tamil Nadu Act* 11 *of* 1971).]